ஏறாவூர் நகர சபை – 2017, மட்டக்களப்பு
--------------------------------------------------

1 நிதிக்கூற்றுக்கள்
--------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்
----------------------------------------

2017 ஆடிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 08 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 13 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஏறாவூர் நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்
---------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்
-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டின் இறுதியில் கேள்வி வாடகை (50-323) வருமான நிலுவை ரூபா 3,506,505 மீளாய்வாண்டின் போது ஆரம்ப மீதியாக நிதிக்கூற்றில் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் பாதை அமைத்தல், வடிகான் அமைத்தல் மற்றும் கட்டிடங்கள் அமைத்தலுக்கு ரூபா 72,722,455 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வாகனத்தரிப்பிடம் அமைத்தலுக்காக சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 51,900 பெறுமதியான பொருட்கள் கட்டிடக் கணக்கில் சாட்டுதல் செய்வதற்கு பதிலாக தளபாடக் கணக்கில் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) உள்ளுர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 4,885,562 செலுத்த வேண்டிய நிலுவையாக காணப்பட்ட போதிலும் ரூபா 1,069,617 மாத்திரமே நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

1.3.2 ஆவணச்சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

| | விடயங்கள் | பெறுமதி (ரூபா) | சான்றுகளின்மை |
|---|---|---|---|
| (i) | காணி கட்டிடம் | 84,889,626 | காணி உரிமைப்பத்திரம் |
| (ii) | பொறித் தொகுதியும், இயந்திரங்களும் | 4,547,643 | நிலையான சொத்துப் பதிவேடு |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | 2,936,615 | |
| (iv) | தளபாடம் பொருத்துகள் | 3,895,210 | |

1.3.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 அத்தியாயம் 177(2) ஆம் பிரிவு | நகர சபையின் நிதி நிலைமைக் கூற்றின் பொழிப்புரை, அடுத்துவரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன் பொதுமக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் சுருக்கத்தை பொது மக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | ஐ<br>கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்.

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2017 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 381,544 இருந்ததுடன்

இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டு வரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 1,931,239 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 1,549,695 வீழ்ச்சியை காட்டுகின்றது.

2.2 வருமான நிர்வாகம்

------------------------

2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) பழைய சந்தைக் கடைகளுக்கான வாடகையாக 40 நபர்களிடமிருந்து 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் அண்டு இறுதி வரை ரூபா 5,018,060 அறவிட வேண்டிய நிலுவையாக காணப்பட்டிருந்த போதிலும் இன்று வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான குத்தகை வருமான நிலுவை ரூபா 791,655 இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------

3.1 செயலாற்றுகை

------------------

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

---------------------------------------------------------

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

----------------------------------------

1988 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்வேறு தேவைகளுக்காக நகர சபை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா. 2,983,996 தொகை சீர் செய்யப்படாமல் காணப்படுகின்ற போதிலும் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 மனிதவள முகாமைத்துவம்

----------------------------------

கணக்காளர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளனியொன்று காணப்பட்ட போதும் நகர சபை உருவான காலம் தொடக்கம் இன்றுவரை அப்பதவிக்கு எவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாராளுமன்ற கணக்காய்வு குழு அறிக்கை

ஏறாவூர் நகர சபையின் 2017 ஆம் ஆண்டில் பாராளுமன்ற பொதுக் கணக்கு குழு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவற்றிற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு.

(அ) அதிகாரமளிக்கப்படாத அலுவலகக் கட்டிடத்தின் நிர்மாணம்

(i) ஒரு கட்டிடத்தின் $1m^2$ தளப்பரப்பிற்கு நியமத்தின் பிரகாரம் ரூபா 4,000 செலவு ஏற்பட்டிருக்கவேண்டிய போதிலும $1m^2$ தளப்பரப்பிற்கு ரூபா 5,300 செலவு ஏற்பட்டிருந்தது மேலும் 1,683 சதுர மீற்றர்களான மொத்த தளப் பகுதியையும் உள்ளடக்கி இக் கட்டிடத்திற்காக இன்றுவரை ரூபா 89,465,726 மொத்தத் தொகையை செலவிட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகள் முழுவதையும் பூர்த்திசெய்வதற்கு சபை மற்றுமொரு ஒப்பந்தத்தை வழங்க வேண்டியிருந்தது.

(ii) யூடிஏ, ஆர்டிஏ மற்றும் சுற்றாடல் அதிகாரசபை என்பவற்றிடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்படாமை காரணமாக இக் கட்டிடம் அங்கீகரிக்கப்படாத கட்டிடமொன்றாக கருதப்பட்டிருந்தது. இதன் விளைவாக, உரிய அதிகாரசபை இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கும் போது சபையானது தண்டப்பணம் செலுத்த வேண்டியிருக்கும்.

(iii) மேற்பார்வை வேலை, விலைப்பட்டியல்களை சான்றுறுதிப்படுத்துதல் என்பவற்றிற்கான அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக பொறியியல் சேவைகள் பிரதிப் பிரதம செயலாளர் உள்ளார். எவ்வாறாயினும், மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட பொறியியலாளரொருவர் கிழக்கு மாகாண முதலமைச்சரின் அறிவுறுத்தல்களுடன் இந்த நோக்கத்திற்காக பணிக்கமர்த்தப்பட்டிருந்தார்.

(ஆ) நூலகக் கட்டிடத் தொகுதியுடனான கலாச்சார மண்டபமொன்றின் அங்கீகரிக்கப்படாத நிர்மாணம்

(i) ஒப்பந்ததாரர் உண்மையாக 400.42 கன மீற்றர் மண்ணை வழங்கி நிரப்பியிருந்த போதிலும் சபையானது 988.80 கன மீற்றர் மண் வழங்கி நிரப்புவதற்காக ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவை மேற்கொண்டிருந்தது. இதன் விளைவாக, ரூபா 1,176,760 தொகை ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்ததாரர் 66.04 கன மீற்றர் தடிப்பான தளத்தை மேற்கொண்டிருந்த போதிலும் கொடுப்பனவானது 93.75 கன மீற்றர் தடிப்பான தளத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ரூபா 387,980 தொகை ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) ஆர்டிஏ, யூடிஏ மற்றும் சுற்றாடல் அதிகாரசபை என்பவற்றிடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்படாமல் இந்த நிர்மாணம் மேற்கொள்ளப்படுகின்றது.

(இ) குத்தகைதாரரின் காணியில் சந்தைத் தொகுதியொன்றின் நிர்மாணம்

---

ரூபா 193 மில்லியன் மொத்தக் கிரயத்தில் மூன்று அடுக்குமாடி சந்தைத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான நிதியை வழங்குவதற்கு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு இணங்கியிருந்ததுடன் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் இந்த சந்தைத் தொகுதியின் நிர்மாணம் தொடர்பில் ரூபா 99,939,468 ஒப்பந்தப் பெறுமதியில் 2016 ஆம் ஆண்டின் போது அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கையை ஏற்படுத்தியிருந்தார். ரூபா 22.28 மில்லியன் மொத்த குத்தகை கொடுப்பனவுக்காக இரண்டு பள்ளிவாசல்களிலிருந்து 33 ஆண்டுகள் காலப்பகுதிக்கு குத்தகை அடிப்படையில் சபையால் பெறப்பட்ட காணியில் இக் கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுவருகின்றது. எவ்வாறாயினும், இக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு வரும் காணியின் சொந்தக்காரர் ஏறாவூர் சகர சபை எனக் குறிப்பிட்டு இந் நிர்மாணத்திற்காக அமைச்சிடமிருந்து சபை நிதிகளை பெற்றிருந்தது. இச் சந்தைக் கட்டிடத் தொகுதியின் மொத்தக் கிரயம் ரூபா 193 மில்லியன் கிரயமாக இருந்த போதிலும் அமைச்சரவை அங்கீகரித்த கேள்விச் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதனை தவிர்க்கும் வகையில் சபை ரூபா 99.94 மில்லியன் பெறுமதிக்கு ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது.

(ஈ) ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை நியமனம் செய்தல்

---

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 25 உத்தியோகத்தர்களால் ஏற்கனவே விஞ்சப்பட்டிருந்த போதிலும் 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்படாமலும் இது தொடர்பான நிதிகளை ஒதுக்கீடு செய்வதற்கான அங்கீகாரம் பெறப்படாமலும் கிழக்கு மாகாண பிரதம அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலை அடிப்படையாகக் கொண்டு 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ஒப்பந்த அடிப்படையில் 73 ஊழியர்களை சபை நியமனம் செய்திருந்தது.

மேலும், சபையால் பராமரிக்கப்பட்ட மூன்று (தரம் III) நூலகங்களிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 05 ஆக இருந்த போதிலும் அந்த நூலகங்களிற்காக 17 அமைய ஊழியர்கள் உள்ளடங்கலாக முப்பத்தைந்து ஊழியர்கள் பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

அமைய அடிப்படையில் நியமிக்கப்பட்டு நூலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட ஊழியர் அந்த நூலகத்திற்கு கடமைக்கு சமூகமளித்திருக்காது 2015 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக சம்பளத்தை பெற்றிருந்தார்.

(உ) பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு அனுப்பப்படாமை

---

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 2/2011 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம், அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் பங்களிப்பு பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது நியமனம் செய்யப்பட்ட 73 ஊழியர்கள் தொடர்பான பங்களிப்பு அவர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டு பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

------------------------------------------------------------

செய்திப் பத்திரிகையில் முன்னாள் சனாதிபதியின் பிறந்த நாள் வாழ்த்தை பிரசுரிப்பதற்காக கிழக்கு மாகாண முதலமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் 2014 இல் ரூபா 22,000 தொகையான சபை நிதி செலவிடப்பட்டிருந்தது.

(எ) பெறவேண்டிய கணக்குகள்

-----------------------------------

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குத்தகை வாடகை நிலுவை ரூபா 3,213,941 தொகையாகும். அதில் ரூபா 1,135,760 தொகை ஏழு வருடங்களிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது.

5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

--------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | பேரேடுகள் நாளாந்தம் முறையாக பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு தயாரிக்கப்படும் போது கடந்த கால உண்மையான செலவுகள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.<br>(ii) சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |